பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 15 (28—6—68) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 16 (29—6—68) சனி [இதழ்: 12

மத நிறுவனங்களுக்கு விதிவிலக்கு இல்லை!

திருச்சி, ஜூன் 28 -

தமிழக நெல், அரிசி கொள்முதல் (இருப்பு அறிவிப்பு; இருப்பைக் கோரிப் பெறுதல்) உத்தரவிலிருந்து மத நிறுவனங்களுக்கு விலக்கு அளிப்பதில்லை என்று தமிழக அரசு இப்போது முடிவு செய்திருக்கிறது.

விலையைக் குறைத்ததால் ஏழைகட்டு மகிழ்ச்சி!

காங்கிரசாருக்கோ பேரதிர்ச்சி!

அச்சன்புதூர், ஜூன் 28—

"பொருள்களின் விலையைக் குறைக்கக் கோரி, நாங்கள் மறியல் போராட்டம் நடத்தினோம்—அதற்காகச் சிறை சென்றோம்; இப்போது அந்த இலட்சியம் நிறைவேறிவிட்டது! பொருள்களின் விலைகள் குறைந்து விட்டன!

"காங்கிரசார் ஆண்ட காலத்தில் அரிசி கிடைக்காமல் மக்கள் அல்லல்பட்டனர்; இன்று, 'அரிசி கிடைக்கவில்லை' என்று சொல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது! எங்கும் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது -- அதுவும், மலிவான விலையில் கிடைக்கிறது! எண்ணெய், பருப்பு, மிளகாய், மற்றும் பல பொருள்களின் விலைகள் குறைந்து விட்டன!

"விலைகளைக் குறைத்துவிட்டதால், ஏழை மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்! காங்கிரசுக்காரர்களோ ஆத்திரமடைகிறார்கள்!

"அவர்கள் ஆத்திரம் அடைவதற்குக் காரணம் என்னவென்றால், 'விலைகள் குறைந்தால் தி. மு. கழகத்துக்கு ஆதரவு பெருகிவிடுமோ' என்ற அச்சம்தான்!

"ஏழைகளின் துன்பத்தைத் துடைப்பதுதான் எங்களுடைய பணி; அதற்காகத்தான் ஆட்சிக்கு வந்தோமே தவிர, காங்கிரசாரைப்போல் பதவி சுகத்தை அனுபவிக்க நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை!

"உங்கள் குறைகளை எங்களிடம் சொல்லுங்கள் -- அதைத் தீர்த்து வைக்கிறோம். நீங்கள் வாக்கு அளித்துத்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்! உங்கள் குறைகளையும், துன்பங்களையும் தீர்த்துவைப்பதைத் தவிர, எங்களுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது?

பானை கட்டிகளே பதில் சொல்வீர்!

இலஞ்சி, ஜூன் 28—

"முன்பு காங்கிரசு ஆட்சி நடந்தபோது, 'மந்திரி' வருகிறார் என்றால், கழகக் கொடிகளை அகற்றுவார்கள்! தி. மு. கழகப் பிரச்சாரத் தட்டிகளை, போலீசுக்காரர்களை விட்டு அகற்றச் சொல்வார்கள்!

"ஆனால் இப்போது தி. மு. கழக அமைச்சர்கள் வரும்போது, காங்கிரசார், பானையைக் கட்டுகிறார்கள்! 'அடிக்க வேண்டும்' என்ற நோக்கத்தைக் காட்டும் விதத்தில் சவுக்கைக் கட்டி வைக்கிறார்கள்!

"நாங்கள் காங்கிரசு அமைச்சர்கள்போல் அவற்றை அகற்றச் சொல்லவில்லை — அனுமதித்திருக்கிறோம்! அதன்மூலம், 'அவர்கள் பண்பாட்டை உலகம் அறிந்துகொள்ளட்டும்' என்று விட்டிருக்கிறோம்!

"பானையை இங்கே கட்டியிருக்கிறார்கள்—'படி அரிசி வேண்டும்' என்பதற்காக! அரிசி வேண்டுமென்றால் பை [illegible] கொண்டு வருவர்; கோணியை எடுத்து வரு[illegible] உலக வழக்கம்; ஆனால், அரிசிப் பானையை எ[illegible] நாம் இதுவரை கேட்டதில்லை!

"அரிசிக்காகப் பானையைத் தூக்குவது, புரட்[illegible]யில்தான்! அந்த நிலை காங்கிரசுக்கு வந்தத[illegible]கிறேன்!

"'அரிசி எங்கே?' என்று இப்போது எங்களைக் [illegible]கிரசுக்காரர்களைத் திருப்பிக் கேட்கிறேன்—1966-ம் ஆண்டு வரை ஆண்டீர்களே — அப்போது உங்கள் ஆட்சியில் அரிசி தாராளமாகக் கிடைத்ததா? மலிவான விலையில் கிடைத்ததா? [illegible]தையெல்லாம் மறந்துவிட்டு, இருபதாண்டுகள் ஆண்ட காங்[illegible]சார், பானையை ஏந்திக்கொண்டு எங்களைப் பார்த்து அரிசி [illegible]கேட்க வீதிக்கு வந்திருப்[illegible]து, எங்களுக்கு வருத்தத்தைத்தான் தருகிறது!

"இங்கு கட்டப்பட்டிருக்கும் சவுக்கு எங்களை அடிக்க அல்ல — 1967 தேர்தலில் தமிழகமெங்கும் விரட்டி விரட்டியடிக்கப்பட்ட காங்கிரசு மாடு, இப்போது வேலியை உடைத்துக்கொண்டு தென்காசித் தொகுதியில் நுழைந்திருக்கிறது — அந்த மாட்டை அடித்து விரட்டத்தான் இந்தச் சவுக்குப் பயன்படப் போகிறது!

"சிறைச்சாலை--சித்திரவதை கண்டு பயப்படாத கழகம், காங்கிரசார் கட்டிய சவுக்குக்கா பயப்படும் — ஒருபோதும் இல்லை!"

--அமைச்சர் மு. கருணாநிதி

(தென்காசித் தொகுதியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில்)

தமிழில் படிப்பவர்களுக்கு அமைச்சரின் உறுதிமொழி

தொழிற் கல்லூரிகளில் சேரத் தடையேதும் இருக்காது

இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

தஞ்சாவூர், ஜூன் 27—

"பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாகக்கொண்டு படித்தவர்கள் பொறியியற் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ சேரத் தடையேதும் இருக்காது"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

இங்குள்ள அரசினர் சரபோஜி கல்லூரியில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்ட புகுமுக வகுப்பில் சேர மாணவர்கள் பெருவாரியாக விண்ணப்பித்துக்கொண்டிருப்பது அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதே இதனைக் கூறினார்.

"பாலிடெக்னிக்குகளில் பிரீ-டெக்னிக் வகுப்பில் சேர்ந்தால், இந்த நெருக்கடியைத் தவிர்க்கலாம்" என்றார் அமைச்சர்.

"பிரீ-டெக்னிக் பயின்று தேர்வு பெற்றால் பிறகு பொறியியல் கல்லூரியிலோ, மருத்துவக் கல்லூரியிலோ சேர அவர்கட்குத் தகுதியுண்டு" என்பதையும் விளக்கினார்.

எஸ். எஸ், எல். சி. படித்த இளைஞர்

தெருக்கூட்டும் வேலைக்கு மனு!

இராஜ்கோட், ஜூன் 28—

தெருக்கூட்டும் வேலைக்கு, எஸ். எஸ். எல். சி. படித்த 'சாதி இந்து' இளைஞர் ஒருவர் விண்ணப்பித்திருக்கிறார்.

குசராத்தில் எஸ் எஸ். எல். சி. படித்துத் தேறிய அந்த இளைஞர் பரோடாவைச் சேர்ந்தவர். இராஜ்கோட் நகராட்சியில், தெருக்கூட்டும் வேலை வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்.

அவருடைய விண்ணப்பத்தில், நகராட்சி மன்ற சுகாதாரக் குழுத் தலைவரும், சுகாதார அதிகாரியும் பரிந்துரை செய்துள்ளனர். நகராட்சி மன்றக் கூட்டத்தில் இதுபற்றி இறுதி முடிவு செய்யப்படவிருக்கிறது.

'மேல் சாதி' என்று சொல்லப்படும் சாதி இந்துவான இவர் எஸ். எஸ். எல். சி. படித்தும் தோட்டிவேலை கேட்டு விண்ணப்பித்திருப்பது, நாட்டின் எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உச்சநிலையடைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது!

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி

அடுத்த ஆண்டுதான் தேர்தல்?

பீகார் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தவும், பிறகு இடைக்காலத் தேர்தல் நடத்தவும், பீகார் ஆளுநர் நித்தியானந்த கனுங்கோ மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்.

ஆளுநரின் அறிக்கை இன்று மாலை இங்கு கிடைத்தது. மத்திய அமைச்சரவை சனிக்கிழமையன்று இதைப் பரிசீலித்தபின், குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பீகாரின் இடைக் காலத் தேர்தல் நடத்துவது என்பது அடுத்த ஆண்டுதான் இயலும். சாதாரணமாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி ஆறு மாத காலத்துக்குத்தான் நீடிக்கும். ஆறு மாதம் முடிந்ததும் தேர்தல் நடைபெறும். ஆனால் பீகார் தட்ப வெப்ப நிலையை முன்னிட்டு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாத வாக்கில் தான் தேர்தல் நடைபெறக்கூடும்.

இந்தியை ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

பண ஆசை காட்டி இந்தியைப் [illegible]டிக்கச் செய்துவிட முடியாது!

[illegible]ப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் [illegible]மைச்சர் செ. மாதவன் முழக்கம்

[illegible]ட்டு பெருந்தலைவர்கள் தவறான நம்பிக்கை குறித்து விளக்கம்

சென்னை, ஜூன் 27—

"இந்தி பேசாத மக்கள்மீது எப்படியாவது இந்தியைத் திணித்துவிட வேண்டும் என்பதில் வட நாட்டினர் உறுதியோடு இருந்துவருகிறார்கள்"

என்று சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் நடந்த ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பியுள்ள திரு மாதவன், ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்ட நடவடிக்கைகள் குறித்து மேலும் குறிப்பிட்டதாவது:—

'ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்ட விவாதங்களில் மொழிச் சிக்கல் முக்கிய இடம் பெறவில்லை என்றாலும், சில பிரதிநிதிகள் அவ்வப்போது மொழிச் சிக்கலை எழுப்ப முனைந்தனர்.

'மும்மொழித் திட்டத்தைத் தமிழக அரசு ஏற்கவில்லை' என்பதைப் பன்முறை எடுத்துக் கூறி, 'சில துறைகளை அனைத்திந்திய மயமாக்கும் திட்டத்தையும் தமிழக அரசு எதிர்க்கிறது' என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டேன்.

"இந்தியா முழுவதிலும் ஒரு பொதுவான பயிற்றுமொழி ஏற்பாடு இல்லாதபோது, அனைத்திந்திய சர்வீசுகளை ஏற்படுத்துவதில் பொருளே இல்லை" என்பதை எடுத்துக் கூறினேன்.

ஆனால் மத்திய அரசோ, மாநில மட்டத்தில் 'வட்டார மொழியைப் பயிற்றுமொழியாக்கு' மாறு கூறுகிறது; அதே நேரத்தில், அனைத்திந்திய சர்வீசுகளையும் விரிவுபடுத்த விரும்புகிறது; இது முற்றிலும் முரண்பட்ட செய்கையாகும்.

"'அனைத்திந்திய சர்விசு' என்ற பெயரால் இந்தியை மறைமுகமாகத் திணிக்க விரும்புகிறீர்கள்; இந்தத் திட்டத்தைத் தமிழக அரசு ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது" என்று திட்டவட்டமாகக் கூறினேன்.

"என்றைக்காவது ஒரு நாள், இந்தியா முழுவதிலும் இந்தி ஆட்சி மொழியாக வந்தே தீரும்" என்று வடநாட்டினர் உறுதியாக நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

உதவிச் சம்பளம் என்ற பெயரிலோ, வேறு வகையிலோ

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 15 (28—6—68) வெள்ளி

பீகார் அரசியல் குழப்பம்--

காங்கிரசுக் கட்சியின் திருப்பணி!

பீகார் ஆட்சிப் பொறுப்பிலிருந்து சோஷித் விதாயக் தள அமைச்சரவை விலகிவிட்டது. முதலமைச்சர் போலா பாஸ்வான் சாஸ்திரி, தமது அமைச்சரவையின் பதவி விலகலை, ஆளுநர் நித்தியானந்த கனுங்கோவிடம் கொடுத்துவிட்டார்.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து தாம் விலகிக் கொண்டுள்ளமைக்கு அவர் குறிப்பிட்டுள்ள காரணம், அவருடைய மதிப்பை உயர்த்தி இருக்கிறது. அவர் சுட்டிக்காட்டியிருக்கின்ற காரணம், முற்போக்குக் கருத்துடையவர்களின் பாராட்டுதலை, அவருக்குத் தேடித் தரக்கூடியதாகும்.

சாஸ்திரி அமைச்சரவையில், இராம்கார் இராஜாவான கே. நாராயண சிங் என்பவர், பொதுப்பணி அமைச்சராக இருந்து வந்தார். அவர், தம்மை துணை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ள வில்லை என சாஸ்திரிமீது குறைபட்டுக் கொண்டிருந்தார். இத்துடன், சுரங்க—கனிப்பொருள் துறையைத் தமமிடம் ஒப்படைக்க வில்லை என்பது பற்றியும், கே. என். சிங்குக்கு முதலமைச்சர்மீது அதிருப்தி இருந்துவந்திருக்கிறது.

இதுவுமல்லாமல், தம்மீது தொடரப்பட்டிருந்த வழக்குகளில் தாம் விரும்பும் வழக்குரைஞர்களை அரசாங்கம் நியமிக்கவேண்டும் என்று முதலமைச்சரை, சிங் வற்புறுத்தி வந்திருக்கின்றார். தாம் விரும்புகின்றவண்ணம் குறிப்பிட்ட அதிகாரிகளை மாற்றுதல் செய்யவும், பதவியில் அமர்த்தவும் வேண்டும் என்றும் அவர், முதலமைச்சரை நெருக்கிவந்தார்.

இக்கோரிக்கைகளுக்கு இணங்க முதலமைச்சர் மறுத்து விட்டார். தம் அமைச்சரவையில் உள்ள ஓர் அமைச்சரின் மேற்படி விருப்பத்துக்கு இணங்குவது என்பது, மக்களுடைய நலன்களைப் பலியிடுவதாக முடியும் என்பது முதலமைச்சர் சாஸ்திரி அவர்களின் கருத்தாகும். இராஜாவின் கோரிக்கைகளுக்கு இணங்கத் தமது மனச்சான்று இடம் தரவில்லை என்றும், மாநிலத்தின் பொது நலன்களுக்கு எதிராக ஆட்சி புரிந்துவர தாம் முதலமைச்சர் பொறுப்பேற்றிருக்கவில்லை என்றும் முதலமைச்சர் சாஸ்திரி, தமது பதவி விலகலுக்குச் செய்தியாளர்களிடம் விளக்கம் கூறியுள்ளார்.

இருபது ஆண்டுக்கால காங்கிரசு ஆட்சிக்குப் பின்னரும் தமக்கும் மனச்சான்று உள்ளது எனக் கூறிக்கொள்ளுவதற்கும—பொதுமக்களின் நலன் என ஒன்று இருக்கிறது என்ற கருத்தைக் கூறுவதற்கும் பாஸ்வான் சாஸ்திரியைப் போன்ற ஒரு அரசியல் வாதி இருந்துவருகிறார் என்பதை எண்ணுகின்றபொழுது, 'பாராட்ட வேண்டும்' என்ற நினைப்பு நமக்கும ஏற்படுகிறது அதிலும், காங்கிரசுக் கட்சியிலேயே பல்லாண்டுக்காலமாக இரண்டறக் கலந்திருந்தவரான பாஸ்வான் சாஸ்திரி, மனச்சான்று பற்றியும் மக்கள் நலன் பற்றியும் உணர்வுடையவராக இருந்து வருகின்றார் என்பது வியப்பளிப்பதாகவும் உள்ளது.

போலா பாஸ்வான் சாஸ்திரியின் அமைச்சரவை, சரியாக தொண்ணூற்றைந்து நாட்களுக்கு முன்னர்தான், பீகாரில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, இக்குறைந்த நாட்களில், சாஸ்திரி அவர்களின் ஆட்சியைப் பற்றி மதிப்பிட்டுக் கூறுவதற்குப் போதிய நியாயம் இருக்கமுடியாது. பொதுமக்கள் நலனில் அக்கறையும், 'மனச்சான்றின்படி நேர்மையாகச் செயல்படவேண்டும்' என்பதில் ஆர்வமும் தமக்கு உண்டு என்ற உண்மையை, இராம்கார் இராஜாவின் சுயநலக் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்ததிலிருந்து, ஐயத்திற்கிடமின்றி சாஸ்திரி அவர்கள் நிலைநாட்டிவிட்டார்.

பீகார் மாநிலத்தைப் பொறுத்தவரையில், பொதுத் தேர்தல் முடிவிலிருந்து இன்று வரையில், நான்கு முதலமைச்சர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். பொதுத் தேர்தல் முடிவு, காங்கிரசுக் கட்சிக்குத் தோல்வியைத் தந்தது.

இதன் விளைவாக, முன்னாள் காங்கிரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான மகாமாய பிரசாத் சின்கா என்பவரை முதலமைச்சராகக் கொண்ட ஐக்கிய முன்னணி அமைச்சரவை, பீகார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்த முதல் ஐக்கிய முன்னணி ஆட்சி, பத்து மாதங்கள் நடைபெற்றது. 1968-ம் ஆண்டு சனவரித் திங்கள் 25-ம் நாள் இரவு, இந்த அமைச்சரவை பதவியைத் துறந்துவிட்டது.

ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றிருந்த சோஷித் தளம் என்ற கட்சியை, முன்னணியிலிருந்து காங்கிரசுக் கட்சி விலகிவரச் செய்து—அப்படிப் பிரிந்துவந்த அக்கட்சியைக் கூட்டு சேர்த்துக்கொண்டு—பிரசாத் சின்கா அமைச்சரவைமீது சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றிவைத்தது. இதன் விளைவாகத்தான், ஆட்சிப் பொறுப்பிலிருந்து மகாமாய பிரசாத் சின்கா வெளியேறினார்.

மகாமாய பிரசாத் சின்கா அவர்களின் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் அமைச்சராக இருந்துகொண்டே, 'சோஷித் தளம்' என்ற பெயரால் ஒரு கட்சியைத் துவக்கினார்—பிந்தேசுவரி பிரசாத் மண்டல் என்பவர். சின்கா அமைச்சரவை பதவியைவிட்டு விலகிய ஐந்து மாதங்களுக்கு முன்னரே, மண்டல், இப்புதிய கட்சியைத் துவக்கியுள்ளார். கட்சியைத் துவக்கிய மறுநாளே, சட்டப் பேரவை காங்கிரசுக் கட்சியுடன் சோஷித் தளத்துக்கு உறவு ஏற்படுத்திக் கொண்டுவிட்டார் மண்டல்.

பிரசாத் சின்காவின் ஐக்கிய முன்னணி அமைச்சரவை வீழ்த்தப்பட்ட அன்று இரவே மண்டலின் சோஷித் தளத்தைச் சேர்ந்த சதீஷ் பிரசாத் சிங் என்பவர், இடைக்கால ஏற்பாடாக அமைச்சப் பட்ட அமைச்சரவையில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். மூன்றே மூன்று நாள், இந்த அமைச்சரவை செயல்பட்டது.

பிப்ரவரி முதல் நாள், காங்கிரசுக் கட்சியினர் ஆதரவுடன் முதல் கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்த்துப் புகழ்பெற்றிருக்கின்ற மண்டல், அதே காங்கிரசுக் கட்சியின் ஒத்துழைப்புடன் முதலமைச்சராகப் பதவிபெற்று, அமைச்சரவையை அமைத்தார். இந்த சோஷித் தள அமைச்சரவையாவது ஆட்சிப் பொறுப்பில் நிலைத்ததா? இந்த அமைச்சரவையை நிலைத்திருக்கக் காங்கிரசுக் கட்சியினர் விட்டார்களா?

சோஷித் தள அமைச்சரவைக்குக் குழிபறிக்கக் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே ஒரு பிரிவினர் துணிந்து முன்வந்தனர். இப்பிரிவின் தலைவர் எல். என். சுதான்சு என்ற பெயரிய சட்டப் பேரவை முன்னாள் தலைவராவார். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இவர், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன், மண்டல் அமைச்சரவையைக் கவிழ்த்துவிட்டார். மண்டல் அமைச்சரவையின் இக்கழுத்தறுப்புக்கு, காங்கிரசுக் கட்சியின் முன்னாள் பெரும்புள்ளியான பிநோதானந்த ஜாவின் 'ஆசீர்வாத பலம்' உண்டு!

மண்டல் வீழ்ச்சிக்குப் பின்னர் பீகார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற வாய்ப்பு, இப்பொழுது காங்கிரசுக் கட்சியினரின் சதிக்கு உள்ளாகிப் பதவியைவிட்டு வெளியேறியுள்ள போலா பாஸ்வான் சாஸ்திரி அவர்களுக்குக் கிடைத்தது. இவரும் ஒரு காங்கிரசுக் கிளர்ச்சியாளராவார். புதிய ஐக்கிய முன்னணிக் கட்சியை தம் தலைமையில் உருவாக்கினார். இந்த சாஸ்திரி அமைச்சரவை மார்ச் 23-ம் நாள் பீகார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 95-நாட்களுக்குப் பின்னர், காங்கிரசுக் கட்சியின் மறைமுகமான தீவிர முயற்சியால், பாஸ்வான் சாஸ்திரி அமைச்சரவை, ஆட்சிப் பொறுப்பிலிரு[illegible] வெளியேறியுள்ளது. ஆட்சிப் பொறுப்பைவிட்டு வெளியேறு[illegible] த[illegible] பாஸ்வான் சாஸ்திரி அவர்களுக்கு [illegible]மியே [illegible]

முரண்பட[illegible] அரசியல் கட்சிகள் கூட்டாக [illegible]றுக்கொள்ளும் பட்சத்தில், [illegible] முரண்பட்ட கொள்கைகளின் [illegible]ம், பேதமும் ஏற்படுவது நிச்ச[illegible] விளைவாகக் கூட்டணி அமை[illegible]ல நீண்ட நாட்களுக்கு நிலைத்து இரு[illegible] கூறப்பட்டுவருகிறது. இக்கருத்தை மெய்ப[illegible], கூட்டணி ஆட்சிகளின் வீழ்ச்சியைச் சான்றுகளாகக் காட்டப்பட்டும் வருகின்றன.

இது எப்படியோ இருக்கட்டும். கூட்டணி அமைச்சரவைகளைக் கவிழ்ப்பதில் காங்கிரசுக் கட்சி, கீழ்த்தரமான முயற்சிகள் அனைத்திலும் ஈடுபடும்—ஈடுபட்டும் வருகிறது என்ற உண்மையை, நாம் மறந்துவிடக்கூடாது.

'பல கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி நீடித்து நிலைக்காது – மக்கள் நலன்களுக்குக் கேடு ஏற்பட்டுவிடும்' என்ற கருத்தை நிலைநாட்டுவதையும் உறுதிப்படுத்துவதையுமே காங்கிரசுக் கட்சி அரசியல் குறியாகக் கொண்டு தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது என்ற உண்மையை நாம், நினைவில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

பீகார் மாநிலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு அமைச்சரவைகள் தலைதூக்கியதும், வீழ்ச்சியுற்றிருப்பதும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செயல்படுத்தியுள்ள சதித் திட்டத்தின் விளைவே என்பதை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

—கா. ச.

தென்காசி வாக்காளர்கள் கடமை -- ம. பொ. சிவஞானம் வேண்டுகோள்

'நல்ல பலன்களைத் தமிழகம் இன்று அனுபவிக்கிறது'

'போனது போனதுதான் என்றிருந்த திட்டங்களை செயல்படுத்த முனைந்திருக்கிறது கழக ஆட்சி'

'வாழ்வளிக்கத் தவறியது காங்கிரசு ஆட்சி -- வாழ்வளிக்கும் கொள்கையை வகுத்து அமுலாக்கிவருகிறது தி. மு. க. ஆட்சி'

'ஆட்சியைப் பலப்படுத்த முனைவீர் -- கழக வேட்பாளருக்கே வாக்களிப்பீர்!'

தென்காசி இடைத்தேர்தலில், கழக வேட்பாளரை ஆதரித்துத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"தென்காசி சட்டப் பேரவைத் தொகுதியில் சூலை 3-ம் நாள் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில், தி. மு. கழகத்திற்கும் — காங்கிரசுக்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டிருக்கிறது.

தென்காசித் தொகுதி வாக்காளர்கள் தி.மு.க. வேட்பாளருக்கு வெற்றியளிக்க வேண்டுமென்பது என் விருப்பம்—வேண்டுகோள்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழக வாக்காளர்கள் காங்கிரசுக்கு அளித்த தண்டனையைத் தென்காசித் தொகுதி வாக்காளர்கள் மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தி சனநாயகத்திற்குச் சிறப்புத் தேட வேண்டும்.

எதிர்க் கட்சியாக இருந்த தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், காங்கிரசுக் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட தவறுகளையெல்லாம் களையப் பாடுபட்டு வருகின்றது. காங்கிரசு செய்யத் தவறிய நன்மைகளைச் செய்யவும் முயற்சி எடுத்து வருகின்றது.

இருபதாண்டுக் காலம் தமிழ் மொழிக்கும், தமிழக மக்களுக்கும் காங்கிரசு இழைத்துள்ள கொடுமைகளை அகற்ற வேண்டுமானால், தி.மு.க. ஆட்சிக்குப் போதிய அவகாசம் தேவை என்பதனைத் தென்காசித் தொகுதி வாக்காளர்கள் உணர வேண்டும். அப்படியே, காங்கிரசு செய்யத் தவறிய நன்மைகளைச் செய்யவும் அதிக அவகாசம் தேவை. தி. மு. கழகம் அதிகாரத்திற்கு வந்து ஓராண்டுக் காலம்தான் ஆகிறது; அதற்குள், அதற்கு எதிராகத் தீர்ப்பு அளிப்பது, பத்தியத்தைப் பாதியிலேயே முறிப்பது போலாகும்! அது அபாயம்!

எதிர்க் கட்சியை ஆளுங்கட்சியாக்கியதன் நல்ல பலன்களைத் தமிழகம் இப்போதுதான் அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறது! மத்திய அரசால் கைவிடப்படவிருந்த தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைக் காத்து, அதனைத் தொடர்ந்து செயல்படுத்தச் செய்திருக்கிறது தி. மு. க. ஆட்சி!

'போனது போனதுதான்' என்றிருந்த சேலம் இரும்பாலைத் திட்டத்தை, தொடர்ந்து உறுதியுடன் முயன்று—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வழி செய்துவிட்டது தி. மு. க. ஆட்சி!

தமிழகத்தாரின் உத்தியோக நலன்களுக்குக் கேடு இழைத்திடும் போக்கில் நடைமுறைக்கு வரவிருந்த இந்தி ஆதிக்கத்தை, வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தியிருக்கிறது தி. மு. க. ஆட்சி!

உணவுப் பிரச்சினையிலே, மேட்டுக்குடி மக்களின் நன்மையை மட்டுமே நினைவில் கொண்டு, ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கத் தவறியது காங்கிரசு ஆட்சி! அந்த நிலையை மாற்றி, மக்கள் எல்லோருக்கும் வாழ்வளிக்கும் வகையில் உணவுக் கொள்கையை வகுத்து, அதனை அமுல் நடத்திவருகிறது தி. மு. க. ஆட்சி!

தாய்மொழிப் பற்றுக்கு, 'மொழி வெறி' எனப் பெயர் தந்து, தமிழர் வாழ்விலே தமிழ்மொழிக்கு முதன்மை தர மறுத்துவந்தது காங்கிரசு ஆட்சி! அந்நிலைமையை மாற்றி, தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரப் பாடுபட்டு வருகின்றது தி. மு. க. ஆட்சி!

இப்படி, பல்வேறு நன்மைகளைச் செய்துவரும் தி. மு. [illegible] ஆட்சியைப் பலப்படுத்[illegible] தென்காசி வாக்காளர் கட[illegible]யாகும்; இதில் தவறி[illegible] 'கைக்குக் கிடைத்தது வாய்க்குக் கிடைக்கவில்லை' என்றாகி விடும்!

அந்தத் தவறு நேராதிருக்க, தி. மு. க. வேட்பாளர் திரு. கதிரவன் அவர்களுக்கே தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டுமென்று தென்காசி வாக்காளர்களைப் பணிவன்புடன் வேண்டுகிறேன்."

மொரார்ஜியின் முரண்பட்ட போக்கு

தமிழகத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட மாட்டாதாம்!

மதுவிலக்கைப் புதிதாக அமுலாக்கும் மாநிலங்களுக்கு உதவியாம்!

பெங்களூர், ஜூன் 27—

" மதுவிலக்குச் சட்டத்தைப் புதிதாக அமுலாக்கும் மாநிலங்களுக்கு — இச்சட்டத்தை அமுல்படுத்துவதால் ஏற்படக்கூடிய இழப்புத் தொகையில் 50 சதவிகிதத்தை — மத்திய அரசு கொடுத்து உதவும் "

என்று, இந்தியத் துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

" இந்த உதவி ஐந்து ஆண்டுகள்வரை அளிக்கப்படும் " என்றும் அவர் தெரிவித்தார்.

" இதற்கு முன்பே மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தி வரும் தமிழ்நாடு, மாராட்டிரம் ஆகிய மாநிலங்களுக்கு இவ்வுதவி அளிக்கப்பட மாட்டாது; ஏனெனில், இதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை அந்த மாநிலங்கள் சரிகட்டிவிட்டன "

என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் சொன்னார்.

இரண்டு நாட்களுக்கு முன், 'மதுவிலக்குச் சட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும்' என்று அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் நிஜலிங்சப்பா அறிவித்திருப்பதை, திரு. மொரார்ஜி தேசாயிடம் சுட்டிக்காட்டியபோது, அது பற்றிக் கருத்தறிவிக்க அவர் மறுத்து விட்டார்; 'மதுவிலக்கு பற்றிய என்னுடைய கருத்து அனைவருக்கும் தெரிந்ததே' என்றும் அவர் கூறினார்.

பத்திரிகைத் தொழிலுக்குச் சலுகைகள் கிடைக்கும்

மத்திய அமைச்சர் அறிவிப்பு

ஜலந்தர், ஜூன் 27—

" பத்திரிகைத் தொழிலையும் தொழில் துறை நிறுவனமாக அறிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளும் "

என்று மத்திய செய்தித் துறை அமைச்சர் கே. கே. ஷா, செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

" பத்திரிகைத் தொழில், தொழில் துறை நிறுவனமாக இயங்குமானால் மற்ற தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள், கடன்கள் ஆகியவை கிடைக்கும்; அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் உள்ள முறைகளும் தளர்த்தப்படும் "

என்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

" மாநிலங்களில் வெளியாகின்ற செய்தித் தாள்களின் அளவு—பக்கங்களின் எண்ணிக்கை ஆகியவைகளைக் குறைப்பதற்கான கட்டுப்பாட்டை மத்திய அரசு விதிக்காது " என்றும் அவர் சொன்னார்.

தற்போது அச்சுக் காகிதங்கள் ஏராளமாக இருக்கின்றன என்றும் பல செய்தித் தாள் நிறுவனங்கள் தங்களுடைய முழு அளவு காகிதங்களையும் வாங்கிக்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[illegible]றியியற் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்கள்

இயக்குநர் அறிவிப்பு

சென்னை, ஜூன் 27—

" தமிழகத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளில் ஐந்து ஆண்டு பட்டப் படிப்பிற்குச் சேர விரும்பும் மாணவர்கள், தங்களுடைய மனுக்களை ஜூலைத் திங்கள் 2-ம் நாள் மாலை 5-மணி வரை அனுப்பலாம் "

என்று தமிழகத் தொழில் நுணுக்கக் கல்வி இயக்குநர் அறிவித்திருக்கிறார்.

கல்வித் துறையில் கழக அரசின் சாதனைகள்!

தென்காசி வாக்காளப் பெருமக்கள் சிந்தனைக்கு!

1. காங்கிரசு ஆட்சியில் 1966 – 67-ல் கல்விக்காக ரூ, 44 கோடிதான் செலவு செய்யப்பட்டது; கழக ஆட்சியில், 1967 - 68-ல், ரூ. 54 கோடி செலவு செய்யப்பட்டது; இந்த ஆண்டில் ரூ 58 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
2. கழகம் ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டில் 67 உயர்நிலைப் பள்ளிகளும், 11 கல்லூரிகளும், 700 துவக்கப் பள்ளிகளும் துவக்கப்பட்டன.
3. பொன்மலையில் காங்கிரசு ஆட்சியில் மூடப்பட்ட உயர்நிலைப் பள்ளி திறக்கப்பட்டது.
4. 1967—68-ல், ஹையர் கிரேடு ஊதியத்தில் வேலை செய்த 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.
5. கல்விச் சலுகை பெறப் பிற்பட்ட — தாழ்த்தப்பட்ட பெற்றோர்களின் வருமான வரம்பு, ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000-ஆக உயர்த்தப்பட்டது.
6. ரூ. 1,500-க்குக் குறைந்த வருமானம் உடையோரின் பிள்ளைகளுக்குப் புகுமுக வகுப்பிலும், புகுமுகப் பொறியியல் வகுப்பிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.
7. அரசிதழ் பதிவுபெரு அலுவலர்களின் பிள்ளைகளுக்கும், மாதம் ரூ. 400-க்குக் குறைந்த வருவாய் உடைய உள்ளாட்சித் துறை ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் மேலே கூறிய வகுப்புக்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.
8. மோரீஸ், பர்மா, மலேசியா நாடுகளின் தமிழ் மாணவர் சிலருக்குத் தமிழ்நாட்டில் கல்வி கற்க உதவித் தொகை அளிக்கப்படுகிறது.
9. பர்மா, இலங்கை அகதிகளின் பிள்ளைகளுக்குத் தமிழகக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்டு உள்ளன.
10. பர்மா, இலங்கை அகதிகளின் பிள்ளைகள் பணம் கட்டாமலேயே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதலாம்.
11. பள்ளிகளில் 40 பீரியடு'களாக இருந்தது, 35 'பீரியடு'களாகக் குறைக்கப்பட்டன.
12. இக்கல்வி ஆண்டிலிருந்து அரசினர் கல்லூரிகளில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களிலும் தமிழ் பயிற்சி மொழியாகும்.
13. இந்த ஆண்டு, பள்ளிகளில் புதிதாக 7,200 ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.
14. செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஹையர் கிரேடு ஊதியம் பெறும் 3 000 ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.
15. இக்கல்வி ஆண்டிலிருந்து உயர் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு இரு சம்பள உயர்வு அளிக்கப்படவிருக்கிறது.
16. 3 முதல் 5 வயதுவரை உள்ள குழந்தைகள் கல்வி பயிலுவதற்கு 1 000 மழலைப் பள்ளிகள் திறக்கப்படவிருக்கின்றன.
17. இவ்வாண்டு 12 கல்லூரிகள் திறக்கப்படுகின்றன.
18. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 10 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டும் வேலை துவக்கப்படுகின்றது.
19. செங்கற்பட்டு, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் கட்டவும், கல்லூரிக்குத் தேவையான பொருட்களை வாங்கவும் ரூ. 77 இலட்சம் செலவு செய்யப்படுகிறது.
20. மதிய உணவுத் திட்டத்திற்கு ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் மைய சமையலறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.
21. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு அரங்குகள் கட்டப்படுகின்றன.
22. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பி.டி. படிப்பதற்கான பணவுதவி இது வரை மாதம் ரூ. 25-தான்; தற்போது மாதம் ரூ. 50 கொடுக்கப்படுகிறது.

—தொகுத்தவர்: மு. இளங்கோ

ஐதராபாத்தில் கா. வேழ[illegible]

மாவட்ட வ[illegible]

ப[illegible]

ஐதராபாத்[illegible] வரும் அனைத்[illegible] வளர்ச்சிக் கருத்தர[illegible]தின் பிரதிநிதியாகத் தமிழகச் சட்டமன்ற தி. மு. க. செயலாளர் கவிஞர் கா. வேழவேந்தன் அவர்கள் கலந்துகொண்டுள்ளார்.

'மாவட்ட வளர்ச்சி மன்றம் தேவையா?' என்பதை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவராகத் திரு. வேழவேந்தன் பணியாற்றிவருகிறார்.

இந்தக் குழுவின் அறிக்கையைத் தயாரித்து முடித்து 30—6—68 அன்று அளித்துவிட்டு, 1—7 – 68 பகல் 2-மணிக்குப் புறப்படும் ஐதராபாத் சென்னை விரைவு வண்டிமூலம் அவர் சென்னை வருகிறார்.

ஐதராபாத் இராசேந்திர நகரில் உள்ள தேசிய சமுதாய வளர்ச்சித் துறை ஆய்வு நிலையத்தின் சார்பில் இந்தக் கருத்தரங்கு நடைபெறுகிறது.

இந்தக் கருத்தரங்கில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு சட்டமன்ற உறுப்பினரும், ஓர் ஊராட்சி ஒன்றியத் தலைவரும் பங்கு கொள்கின்றனர்.

ரூ. 53.49 கோடி மதிப்புள்ள இரும்ப[illegible]ருக்கு ஏற்றுமதி

[illegible]டில்லி, ஜூன் 27—

[illegible] திங்களுடன் முடி[illegible]லத்தில் மொத்தம் [illegible]ன் இரும்பும், உருக்[illegible]தியாகி இருப்பதாக [illegible] மதிப்பீடுகளிலிருந்து [illegible]வருகிறது. இவற்றின் மதிப்பு ரூ 53 49 கோடி.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, மேற்காசிய நாடுகள், பாரசீக வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், கிழக்காசிய நாடுகள், யூகோஸ்லேவியா, பல்கேரியா, சோவியத் யூனியன், போலந்து ஆகிய 39 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மிதவாதிகள் கட்சி ஆட்சி அமைக்கும் சூழ்நிலை

கனடாவில் உருவாகியுள்ளது

கனடா நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மிதவாதக் கட்சி பெரும்பான்மை இடங்களைச் கைப்பற்றியிருக்கிறது.

அரசியலுக்குப் புதியவரும், திருமணமாகாதவரும் மிதவாதக் கட்சியின் தலைவருமான எல்லியட் ட்ருடோ என்பவர், கானடா நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவியேற்பார்.

1962-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் தேர்தல்களில், இத்தேர்தலில்தான பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ள ஒரு கட்சி, ஆட்சியை அமைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

264 இடங்களைக் கொண்ட கனடா பாராளுமன்றத்தில், லிபரல் கட்சி 154 இடங்களைக் கைப்பற்றி பெரும்பான்மைக் கட்சியாகி இருக்கிறது.

முன்பு பாராளுமன்றத்தில் இருந்த உறுப்பினர்களைவிட இக்கட்சிக்கு 23 இடங்கள் தற்போது அதிகமாகக் கிடைத்துள்ளன.

ஆலந்தூரில்

கருணாநிதி பிறந்தநாள் விழா

ஆலந்தூர் கருணாநிதி மன்றச் சார்பில், அமைச்சர் கருணாநிதி அவர்களின் 45-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா, 23—[illegible]—68-ல், தோழர் மதனகோ[illegible] தலைமையில் மண்டித் தெருவில் கொண்டாடப்பட்டது.

விழாவில், அமைச்சர் கருணாநிதி அவர்களின் பணிகளைப் பாராட்டி தோழர்கள் டி. கே. சீனுவாசன், ஆலந்தூர் எஸ். பாலன், மோகனரங்கம் எம்.ஏ., எஸ். வேணுகோபால், ஆர். எஸ். பாரதி, கோ. மோகன், எம். சி. துரை, கோ. நீலகண்டன் ஆகியோர் பேசினர்.

கூட்டத் துவக்கத்தில், மன்றத்தின் இரவு பள்ளியில் பயிலும் மாணவிகள், தமிழ்த்தாய் பாடல்கள் பாடினர்.

தோழர் சண்முகம் மாணவ—மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர்.

பொள்ளாச்சி பஸ் விபத்து

சட்டமன்ற உறுப்பினர் ஈ. இராமசாமி ஆறுதல்

22—6—68 அன்று பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை வந்து கொண்டிருந்த ஏ. பி. டி. பஸ் ஒன்று அய்யர்பாடி எஸ்டேட் அஞ்சல் நிலையம் அருகில் கவிழ்ந்து அதில் பயணம் செய்தவர்களில் பதினறு பேர் மரணமடைந்தும், பலர் காயமடைந்தும் உள்ள செய்தி கேட்டு சட்டமன்ற உறுப்பினர் ஈ. இராமசாமி அந்த இடத்துக்கு விரைந்தார்.

தந்தையை இழந்தோரும், தாயை இழந்தோரும், சகோதரனை இழந்தோரும், சகோதரியை இழந்தோரும், மனைவிமக்களை இழந்தோருமாகப் பலர் இருக்கக் கண்டு கண் கலங்கினர். பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கட்கு ஆறுதல் கூறினர். மருத்துவமனையில் சிகிச்சைபெறுவோருக்கு ஆறுதல் கூறினர்.

சென்னை 21-வது வட்ட எம். ஜி. ஆர். படிப்பகம்

தி விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிப்பு

சென்னை 23-வது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு, எம். ஜி. ஆர். படிப்பகச் சார்பில் 23—6—68 அன்று பகல் சீரணித் தலைவர் சு. மோகன்ராஜ் தலைமையில் 800 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

நீக்ரோ தலைவருக்கு சிறைத் தண்டனை

வாஷிங்டன், ஜூன் 27—

'சட்ட விரோதமானதோர் கூட்டத்தில் கலந்துகொண்டார்' எனக் காரணம் காட்டப்பட்டு நீக்ரோ மக்கள் தலைவர் ரால்ப் ஆபர்நாட்டிக்கு இருபது நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரசு (பார்லிமெண்டு) கட்டிடத்தின்முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில்—350 ஏழையர்களுடன—அவர் ஈடுபட்டார்; அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

'திடீர் நகரை'க் காலி செய்யும்படி போலீசார் உத்தரவிட்ட போது, அதற்குக் கீழ்ப்படிய அவர் மறுத்துவிட்டார்.

" ஏழை மக்கள்பால் அரசுக்குள்ள கடமையை நினைவுறுத்தவே நான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டேன் "

என்று நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஜூலை 11-ல் திறக்கப்படும்

சிதம்பரம், ஜூன் 27—

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஜூலை 1-ம் நாளுக்குப் பதில் ஜூலை 11-ம் நாள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழக மின் குழு

செங்கற்பட்டு மின் பெருவட்டம்

டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (Tenders) அடியிற் கையொப்பமிட்டவரால் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் இரயில்வே சாலையிலுள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்களின் விவரம்	முடிவு நாள்
1.	எஸ்இசி/டி 11/68-69	அரை அங்குல விட்டமுள்ள மணிலா கயிறு (சுமார் ஒன்றரை அங்குலம் சுற்றளவு கொண்டது)	15—7—68
2.	எஸ்இசி/டி. 12/68-69	முக்கால் அங்குல விட்டமுள்ள மணிலா கயிறு (சுமார் இரண்டேகால் அங்குலம் சுற்றளவு கொண்டது)	15—7—68
3.	எஸ்இசி/டி. 13/68-69	ஆர். சி. சி. சம்ப பேக் கிளாம்ப் சாதாரண வகை (RCC. Pole Back Clamp ordinary)	16—7—68
4.	எஸ்இசி/டி. 14/68-69	ஆர். சி. சி. கம்ப பேக் கிளாம்ப் ஸ்பெஷல் (RCC. Pole Back Clamp Special)	16—7—68
5.	எஸ்இசி/டி. 15/68-69	ஆர். சி. சி. கம்ப ஸ்டே கிளாம்ப் சாதாரண வகை (RCC. Pole Stay Clamp ordinary)	16—7—68
6.	எஸ்இசி/டி. 16/68-69	ஆர். சி. சி. கம்ப ஸ்டே கிளாம்ப் ஸ்பெஷல் (RCC. Pole Stay Clamp Special)	16—7—68
7.	எஸ்இசி/டி. 17/68-69	"B" மாடல் பெட்டி செய்தல் ("B" type Box)	12—7—68
8.	எஸ்இசி/டி. 18/68-69	அறுகோணத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். எம். எஸ். 3"×5/8" (75 மி.மீ.× 16 மி.மீ)	18—7—68
9.	எஸ்இசி/டி. 19/68-69	ஷை 3½"×5/8" (87 மி.மீ.× 16 மி.மீ.)	18—7—68
10.	எஸ்இசி/டி. 20/68-69	ஷை 4"&4½" × 5/8' (100 மி. மீ. & 112 மி. மீ. × 16 மி. மீ)	18—7—68
11.	எஸ்இசி/டி. 21/68-69	ஷை 5"×5/8" (125 மி.மீ. × 16 மி.மீ.)	18—7—68
12.	எஸ்இசி/டி. 22/68-69	ஷை 6", 8", 9' & 10' × 5/8" (150 மி.மீ, 200 மி.மீ., 225 மி. மீ. & 250 மி. மீ. × 16 மி.மீ.)	18—7—68
13.	எஸ்இசி/டி. 23/68-69	ஷை 1", 1½", 2" & 2½" × 3/8' (25 மி.மீ., 37 மி.மீ., 50 மி. மீ. & 62 மி மீ × 10 மி.மீ) & 1½" 2" & 2 3/4" ×5/8" 37 மி.மீ. 50 மி.மீ. & 68 மி.மீ.×16 மி.மீ)	19—7—68
14.	எஸ்இசி/டி. 24/68-69	அறுகோணத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். ஜி ஐ. 1", 1½" & 2" × 3/8" (25 மி.மீ. 37 மி. மீ. & 50 மி. மீ. ×10 மி. மீ.)	19—7—68
15.	எஸ்இசி/டி. 25/68-69	சதுரத்தலை உள்ள போல்ட்டும் நட்டும். ஜி. ஐ. 4½" × ½" (112 மி.மீ. × 12 மி.மீ.)	19—7—68
16.	எஸ்இசி/டி. 26/68-69	எம்.எஸ். வாஷர்கள் 5/8" & 3/8" (16 மி.மீ. & 10 மி.மீ.	19—7—68
17.	எஸ்இசி/டி. 27/68-69	2'×20 வாட் குழல் விளககுகளுக்கான தெரு விளக்கு பிட்டிங்குகள்	20—7—68
18.	எஸ்இசி/டி. 28/68-69	குழல் விளக்குகளுக்கான 20 வாட் சோக்குகள்	20—7—68
19.	எஸ்இசி/டி. 29/68-69	குழல் விளக்குகளுக்கான 40 வாட் ஸ்டார்டர்கள், சோக்குகள்	20—7—68
20.	எஸ்இசி/டி. 30/68-69	குழல் விளக்குகளுக்கான 20 வாட் ஸ்டார்டர்கள்	20—7—68
21.	எஸ்இசி/டி. 31/68-69	அலுமினியம் பெயிண்ட்	11—7—68
22.	எஸ்இசி/டி. 32/68-69	ஆன்ட்டி கரோசிவ் கருப்புப் பெயின்ட்	11—7—68
23.	எஸ்இசி/டி. 33/68-69	ரெட் ஆக்ஸைட் ப்ரைமர்	11—7—68
24.	எஸ்இசி/டி. 34/68-69	ஜின்க் குரோமேட் ப்ரைமர்	11—7—68
25.	எஸ்இசி/டி. 35/68-69	ப்யூஸ் யூனிட் 15 A 500 V	23—7—68
26.	எஸ்இசி/டி. 36/68-69	ஷை 30 A 500 V	23—7—68
27.	எஸ்இசி/டி. 37/68-69	ஷை 100 A 500 V	23—7—68
28.	எஸ்இசி/டி. 38/68-69	ஷை 200 A 500 V	23—7—68
29.	எஸ்இசி/டி. 39/68-69	கட்-அவுட் 100 A 500 V	23—7—68
30.	எஸ்இசி/டி. 40/68-69	எல்.டி. ஷாக்கிள் ஹார்டுவேர்	15—7—68

டெண்டர் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5.15 (விற்பனை வரி உட்பட) ஆகும்.

மேற்படி டெண்டர் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 5.15 வீதம், 'தலைமைக் கணக்கர் (செலவுப் பிரிவு), செங்கற்பட்டு மின் பெருவட்டம் (Chief Accountant/Expr. Chingleput Elecy. System), இரயில்வே சாலை, காஞ்சிபுரம்' என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand Draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி, அவற்றை 22—6—68-ந் தே[illegible]ம். மேற்படி தொகை எக்காரண[illegible]டமாட்டாது.

இத்தொகையை[illegible]னுப்புவோர் தமது முகவரியையும், தேவை[illegible]றுக குறிப்பு எண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்ப்பிக்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பங்களும் குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

விலை ஒப்பங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-30 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பதாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

சூப்பரிண்டென்டிங் எஞ்சினியர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம், காஞ்சிபுரம்.

தாராபுரம் நகர தி. மு. க. தேர்தல்

கோவை மாவட்டம் தாராபுரம் நகர தி. மு. க. கிளைத் தேர்தல், 7—7—68-ல், மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் விசயமங்கலம் தோழர் வி. வி. இராமு தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30--6--68

திருச்சி

31-வது வட்ட தி. மு. க. 10-வது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு இடத் தெருவில்; தலைவர்: வெ. கிருஷ்ணன்; பேசுவோர்: எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன், எஸ். ஏ.ஜி. ராபி, வி. கிருஷ்ணமூர்த்தி. (இசைக்குயில் யூ. ஆர். சீவரத்தினம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.)

அருப்புக்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பாண்டியன் திடலில்; தலைவர்: ஆ. குருசாமி; பேசுவோர்: இ. முத்துராமலிங்கம், சிவ. சண்முகசுந்தரனார், மீ. பாலசுந்தரம், ப. பெ. ந. நல்லதம்பி.

சட்ட அமைச்சர்

செ. மாதவன்

நிகழ்ச்சிகள்

ஜுன் 30 காலை 9-மணி: சேலம்—அதிகாரிகள் குடியிருப்புத் திறப்பு; மாலை 5-மணி: மேட்டூர்—மின் கழகக் கணக்காயர் சங்கப் புதிய கட்டிடத் திறப்பு விழா.

நலத் துறை அமைச்சர்

சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

ஜுன் 29 காலை 10-30 மணி: கல்லுப்பட்டி—பொதுமக்கள் வரவேற்பு; 11-மணி: பேரையூர்—பொதுமக்கள் வரவேற்பு; பிற்பகல் 2-மணி: சேடப்பட்டி—ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு; மாலை 4-மணி: வைகை அணை—மாநிலக் காடு வளர்ப்புப் பயிற்சிப் பள்ளி எழாவது ஆண்டு பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்குதல்; 6-மணி: மதுரை—சேமிப்பு நிறுவன ஆண்டு விழா.

கண்ணம்மா --- தங்கராசு

கலை நிகழ்ச்சிகள்

ஜுன் 29: தென்காசி; 30: வெள்ளித் திருப்பூர்; ஜுலை 1: பெருந்துறை; 5: காப்பாய (லால்குடி); 6: நகர்[illegible] வட்டம்; 8: [illegible] மேலப்பட்டி; [illegible] ஞூர்; 14: மத[illegible]

மத்திய அரசின் அமைச்சுத் துறையில் கருத்து வேற்றுமை

புதுடில்லி, ஜுன் 27—பஞ்சாப், அரியானா மாநிலங்களிலிருந்து மேற்கு வங்காளத்திற்கு உணவுத் தானியங்கள் அனுப்பப்படுவது குறித்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகத்திற்கும்—இரயில்வே அமைச்சகத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.

கொள்முதல் செய்யப் பட்ட உணவுத் தானியங்களை அனுப்புவதற்குத் தேவையான இரயில் பெட்டிகளை இரயில்வே அமைச்சகம் கொடுத்துதவவில்லை என்று வேளாண்மைத் துறை அமைச்சகம் குற்றஞ் சாட்டியுள்ளதை, இரயில்வே அமைச்சகம் மறுத்துள்ளது.

குற்றாலம்--'உல்லாச நகர்'

அமைச்சர் மா. முத்துசாமி தரும் விளக்கம்

குற்றாலத்திற்கு வருகை தந்திருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், செய்தியாளர்களிடம் கூறியதாவது :—

"தமிழ்நாட்டில் நகராட்சித் தேர்தல் செப்டம்பரில் நடைபெறும். தேர்தலுக்கான தேதி விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

"குற்றாலத்தை, 'உல்லாச நகர்' என்று அறிவிப்பது, சம்பந்தமாக மத்திய அரசுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும்.

'ஊராட்சிகளுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டிக்கொடுக்க நிதி நிலைமையை எந்த அளவில் அனுமதிப்பது என்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது; விரைவில் இதற்காகத் திட்டம் தயாரிக்கப்படும்."

வடநாட்டுப் பெருந் தலைவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண ஆசை காட்டி, 'தென்னாட்டு மக்களை இந்தி படிக்கச் செய்துவிடலாம்' என்ற எண்ணம் வடக்கத்தியரிடையே நிலவுகிறது. இந்த எண்ணம் பெருந் தலைவர்களின் மனத்திலேகூட இருந்துவருவது வருந்தத்தக்கது!

'அரசியலில் நாடு ஒன்றுபட்டிருக்க வேண்டும்' என்பதை வலியுறுத்திய நேரத்தில், பல வேறு பிரதிநிதிகள், 'மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட அரசாக இருக்க வேண்டுமா அல்லது அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட அரசாக இருக்க வேண்டுமா' என்று கேட்டனர்.

"உண்மையான கூட்டாட்சி (பெடரல்) அமைப்பு இருக்க வேண்டும்; அதுவும், உள்ள பூர்வமானதாக இருக்க வேண்டும்; வெறும் ஏட்டளவில் இருக்கக்கூடாது' என்னும் தமிழக அரசின் கொள்கையை நான் தெளிவுபடுத்தினேன்."

தென்னாட்டில் உள்ளவர்கள் தாங்களே விரும்பி இந்தியைப் படித்து வந்தனர்; இந்தித் திரைப் படங்களின் இசையின் இனிமையைச் சுவைத்தனர்; கட்டாயமில்லாமலே இத்தனையும் நடந்தன!

ஆனால், இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க முனைந்த போது கடுமையான எதிர்ப்புத் தோன்றியது! பிற மொழியின் ஆதிக்கத்தை உண்டாக்கும் இம்முயற்சிதான் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு அறைகூவலாகிவிட்டது.

நாட்டு ஒற்றுமைக்கு மொழிப் பிரச்சினை இடையூறாகிவிட்டது! மொழி ஆதிக்கம்தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம்!

மும்மொழித் திட்டமும், பயிற்று மொழித் திட்டமும் குழப்பமுண்டாக்குவதாக உள்ளன.

மும்மொழித் திட்டம் என்பது ஐயத்துக்கு இடந்தருவது — மாயத்தன்மை வாய்ந்தது! நடைமுறையில் பயனற்றது!

மும்மொழித் திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் ஆங்கிலம் கட்டாயமாக இருக்கும். இந்த நிலையில் எப்போது—எப்படி ஆங்கிலத்தைக் கைவிட முடியும்?

கடைசியில் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி வகிக்கப்போகிறது என்றால், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் சொல்லித்தருவதால் பயனேதும் இல்லை!

'நீதிமன்றங்களில், வட்டார மொழி நிர்வாக மொழியாகும்' என்று மத்திய அரசு கூறியது; அதே நேரத்தில், 'ஒருமைப்பாட்டைக் காக்கும் நோக்குடன், ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி மற்றொரு மாநிலத்தின் நீதிபதியாக மாற்றப்படும் நிலை வேண்டும்' என்றும் கூறினர்.

எல்லா மாநிலங்களிலும் பல்கலைக் கழகங்களில் இந்தி பயிற்று மொழியானாலன்றி, எல்லா நீதிமன்றங்களிலும் இந்தி வழக்குரைக்கும் மொழியானாலன்றி — மாணவர்கள் மாநிலம்விட்டு மாநிலம் கல்வி பயிலச் செல்வதோ, நீதிபதிகள் வேறு மாநில நீதிபதிகளாகப் பதவியேற்பதோ இயலக்கூடியதல்ல!

'நாட்டின் ஒருமைப்பாடு' [illegible] பெயரால் உயர்தரக் க[illegible] துறையிலும், நீதிம[illegible] துறையிலும், இந்தியை மறை[illegible]முகமாக நுழைக்க முயற்சி நடப்பதாகத்தான் தமிழ் நாட்டு மக்கள் நினைக்கிறார்கள்!"

வ. ஆ. மாவட்ட நகர தி. மு. க. கிளைத் தேர்தல்கள்

7--7--68 அன்று நடைபெறும்

அரக்கோணம்
ஆற்காடு
இராணிப்பேட்டை
ஆரணி
வாலாசா

ஆகிய நகரக் கிளைகளின் தேர்தல்கள், மாவட்டச் செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் [illegible]களின் தலைமை [illegible]றும்.

[illegible]கம் (தி.மு.க.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரிய நாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு [illegible]